தமிழ்நாடு சட்டப் பேரவை

திங்கட்கிழமை, 1972 டிசம்பர் 4

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் முற்பகல் 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்

வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்

Drinkng Water-Supply Schemes

***21. Q.—THIRU N. K. PALANISWAMY :** Will the Hon. the Chief Minister be pleased to state the steps taken by the Government to improve drinking water-supply to Ooty and Coonoor in Nilgiris district?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : உதகமண்டலம்—பார்சன் பள்ளத்தாக்கு நீர்த்தேக்கத்தை வாயிலாகக் கொண்டு உதகமண்டலத்திற்குக் குடிநீர் வழங்கும் திட்டம் ஒன்றை நிறைவேற்ற ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. நீரேற்று முக்கியக் குழாய் அமைக்கும் பணி முடிக்கப்பட்டு இத்திட்டம் 5—5—1970-ஆம் நாளிலிருந்து பயனுக்குக்கொண்டுவரப்பட்டது. பிற பணிகள் நடந்தேறி வருகின்றன.

குன்னூர்.—குன்னூர் குடிநீர் வழங்கு மேம்பாட்டுத் திட்டம் ஒன்று தமிழ் நாடு குடிநீர் வழங்கு வடிகால் வாரியத்திலிருந்து வந்துள்ளது. இத்திட்டத்தினை நிறைவேற்றுவதற்கு ரூ. 56.60 லட்சமும் ஆண்டு தோறும் அதைப் பேணுவதற்கு ரூ. 87,500 செலவு ஆகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இத்திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. எம். தேவராசன் : தலைவர் அவர்களே, பார்சன் பள்ளத்தாக்கு திட்டத்தினால் மின்சார வாரியத்திற்கு நகராசபை கொடுக்கவேண்டிய தொகையை அரசு ரத்து செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நகராசபைக்கும் அந்தத் திட்டத்திலே பொறுப்பு இருக்கிறது.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவர் அவர்களே, தமிழகத்திலே இருக்கிற எல்லா பகுதிகளுக்கும் குடிநீர் வசதியை செய்துதர ஒரு சிறப்பு திட்டத்தை வகுத்து நிறைவேற்ற அரசு முன் வருமா? அதே நேரத்தில், திருப்பிச் செலுத்த சக்தியுள்ள ஊராட்சி மன்றங்களுக்கு குடிநீர் வசதியை வாரியத்தின் மூலமாக செய்துதர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீரை நகராட்சிகளுக்கும் பேரூராட்சிகளுக்கும் மற்றும் கிராமங்களுக்கும் உடனடியாக வழங்கவேண்டுமென்பதற்கு சிறப்பு திட்டம் அமைக்கப்பட்டு அது இன்று குடிநீர் வாரியத்தின் மூலமாகவும் நிறைவேற்றப்படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள்.

திரு. என். கணபதி: இந்தக் குடிநீர் வாரியத்தில் ஆய்வுத் தொகையாக முதலிலே பணம் கட்டச் சொல்கிறார்கள். வசதியில்லாத பேரூராட்சி மன்றங்களும் ஊராட்சிமன்றங்களும் பொதுமக்களிடமிருந்து நிதி வாங்கி செலுத்துவதற்கு அரசு வசதி செய்து தருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பொதுமக்களிடமிருந்து வாங்குவதற்கும் அரசாங்கமே வசதி செய்து கொடுக்கும் என்பது இயலாத காரியம்.

*22. **வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், கிருஷ்ணராயபுரம் பேரூராட்சிப் பகுதிகளுக்கு குடிநீர் வழங்கும் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) ஆம்.

(இ) தமிழ்நாடு, குடிநீர் வடிகால் வாரியம் கிருஷ்ணராயபுரம், பழைய ஜெயங்கொண்ட சோழபுரம் ஆகிய பேரூராட்சிகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டத்தை அமுல் படுத்த வேண்டி தனது ஆணை எண். 108, தேதி 28—3—1972-ல் ஆய்வுப் பணிகளுக்கான மதிப்பீட்டுத் தொகை ரூ22,000-க்கு அங்கீகாரம் வழங்கியுள்ளது. பேரூராட்சி மன்றங்கள் ஆய்வுக்கான செலவுகளை இன்னும் செலுத்தவில்லை. பேரூராட்சி மன்றங்கள் ஆய்வுக்காகும் செலவுத் தொகையை முழுவதாக செலுத்தியவுடன் ஆய்வு வேலைகள் மேற்கொள்ளப்படும்.

வைதீஸ்வரா உயர்நிலைப் பள்ளிக்கு விஞ்ஞான கூடம்

*23. **வினா—திரு. எம் சுரேந்திரன்:** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மேட்டூரில் உள்ள வைதிஸவரா தனியார் உயர்நிலைப்பள்ளி விஞ்ஞான கூடம் ஒன்று அமைக்க வேண்டுமென கோரி அரசிற்கு வந்த விண்ணப்பத்தின் மீது எடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கைகள் என்ன?